# கம்பம் நகராட்சி

2019–ஆம் ஆண்டு மார்ச் மாதம் (08.03.2019) ஆம் நாள் வெள்ளி கிழமை பிற்பகல் 04.00 மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

## கூட்டப் பொருட்கள்

| | |
|---|---|
| 1. | கம்பம் உள்ளூர் திட்டக்குழும பகுதி முழுமைத்திட்டம் அரசாணை எண்.637வி.வ. (ம) ந.பு.வ.துறை நாள்.04.10.1994 அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி முழுமைத்திட்டத்தில் வார்டு D, பிளாக்–25, நகரளவை எண்.8/5 (பழைய சர்வே எண்.744/2) பொது மற்றும் சார்பு பொது உபயோக பகுதியாக நில உபயோகம் பகுக்கப்பட்டுள்ளது. மேற்படி, இடம் அங்கீகரிக்கப்பட்ட திட்டம் 5–இல் அமைகிறது. கம்பம் விரிவுஅபிவிருத்தித் திட்டம் 5–இல் இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை அவர்களின் செயல்முறை ஆணை கடிதம் ந.க.எண்.14473/1994/DP2 நாள்.29.11.1994–இல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.<br>மேற்படி விரிவு அபிவிருத்தித் திட்டம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட முழுமைத்திட்ட நில உபயோகங்கள் நிலைநிறுத்தப்பட்டு ஒப்புகை அளிக்கப்பட்டுள்ளது. விரிவு அபிவிருத்தி திட்டம் தயாரித்தல் / அங்கீகரித்தல் விதிகளின்படி 5 சதவீதம் இடம் பொது உபயோக பகுதியாக பகுக்கப்பட வேண்டும். ஆனால் இவ்விரிவு அபிவிருத்தி திட்டத்தில் 90 சதவீதம் இடம் பொது உபயோகப் பகுதியாக நிலைநிறுத்தப்பட்டுள்ளதால் திட்ட பாதிப்பு ஏதுமில்லை. எனவே, தற்போது இந்நகராட்சியின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு மேற்படி இடத்தினை பொது உபயோகம் மற்றும் சார்பு உபயோகப் பகுதியிலிருந்து, குடியிருப்பு பகுதியாக திட்ட மாற்றம் செய்வது தொடர்பாக பொது மக்களிடத்தில் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பெறும் பொருட்டு இந்நகராட்சியின் மூலம் 22.01.2019–ஆம் தேதியில் இரண்டு தினசரி நாளிதழ்களில் விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்டு 30 தினங்கள் முடிவுற்ற நிலையில் மேற்படி நிலம் பயன்பாடு மாற்றம் செய்வது தொடர்பாக பொது மக்களிடமிருந்து ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் ஏதும் பெறப்படவில்லை.<br>எனவே, மேற்படி நகரளவு எண்களில் கட்டுப்பட்டுள்ள மனுதாரர் திரு.எஸ். உமர்பாருக் அவர்களுக்கு சொந்தமான 2 ஏக்கர் 68 செண்ட் பரப்பளவுள்ள நிலத்தினை பொது உபயோகம் மற்றும் சார்பு உபயோக பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக திட்ட மாற்றம் செய்வதற்கு இடம் ஆய்வு செய்து அனுமதி பெறும் பொருட்டு இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பும் பரிந்துரை செய்து அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்: 787/2018/எப்1) |
| 2. | கம்பம் உள்ளூர் திட்டக்குழும பகுதி முழுமைத்திட்டம் அரசாணை எண்.637வி.வ. (ம) ந.பு.வ.துறை நாள்.04.10.1994 அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி முழுமைத்திட்டத்தில் வார்டு D, பிளாக்–25, நகரளவை எண்.9/1, 2, 3, 4A மற்றும் 4B (பழைய சர்வே எண்.741) பொது மற்றும் சார்பு பொது உபயோக பகுதியாக நில உபயோகம் பகுக்கப்பட்டுள்ளது. மேற்படி, இடம் அங்கீகரிக்கப்பட்ட திட்டம் 5–இல் அமைகிறது. கம்பம் விரிவுஅபிவிருத்தித் திட்டம் 5–இல் இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை அவர்களின் செயல்முறை ஆணை கடிதம் ந.க.எண்.14473/1994/DP2 நாள்.29.11.1994–இல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.<br>மேற்படி விரிவு அபிவிருத்தித் திட்டம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட முழுமைத்திட்ட நில உபயோகங்கள் நிலைநிறுத்தப்பட்டு ஒப்புகை அளிக்கப்பட்டுள்ளது. விரிவு அபிவிருத்தி திட்டம் தயாரித்தல் / அங்கீகரித்தல் விதிகளின்படி 5 சதவீதம் இடம் பொது உபயோக பகுதியாக பகுக்கப்பட வேண்டும். ஆனால் இவ்விரிவு அபிவிருத்தி திட்டத்தில் 90 சதவீதம் இடம் பொது உபயோகப் பகுதியாக நிலைநிறுத்தப்பட்டுள்ளதால் திட்ட பாதிப்பு ஏதும் இல்லை. எனவே, தற்போது இந்நகராட்சியின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு மேற்படி இடத்தினை பொது உபயோக மற்றும் சார்பு உபயோக பகுதியிலிருந்து, குடியிருப்பு பகுதியாக திட்ட மாற்றம் செய்வது தொடர்பாக பொது மக்களிடத்தில் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பெறும் பொருட்டு இந்நகராட்சியின் மூலம் 13.01.2019–ஆம் தேதியில் இரண்டு தினசரி நாளிதழ்களில் விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்டு 30 தினங்கள் முடிவுற்ற நிலையில் மேற்படி நிலம் பயன்பாடு மாற்றம் செய்வது தொடர்பாக பொது மக்களிடமிருந்து ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் ஏதும் பெறப்படவில்லை. |

| | |
|---|---|
| | எனவே, மேற்படி நகரளவு எண்களில் கட்டுப்பட்டுள்ள மனுதாரர் திரு.இரா. பாஸ்கர் அவர்களுக்கு சொந்தமான 7 ஏக்கர் 90 செண்ட் பரப்பளவுள்ள நிலத்தினை பொது உபயோகம் மற்றும் சார்பு உபயோக பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக திட்ட மாற்றம் செய்வதற்கு இடம் ஆய்வு செய்து அனுமதி பெறும் பொருட்டு இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பும் பரிந்துரை செய்து அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்: **96/2018**/எப்1) |
| **3.** | கம்பம் நகர் பகுதிகளில் தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம் 0–5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு 10.03.2019 அன்று நடைபெறவுள்ளதால், அவ்வாறான நிகழ்வுகளுக்கு ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் மற்றும் பேருந்து நிலையம், ஒக்கலிகர் மன்றத்தில் பந்தல் மற்றும் ஷாமியானா அமைத்து போலியோ சொட்டு மருந்து கொடுப்பதற்கு செலவுத்தொகை ரூ. 20,000/–ம் மேற்கொள்வதற்கு மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பணியின் அவசியம் கருதி போலியோ சொட்டு மருந்து முகாம் சிறப்பாக நடத்துவதற்கு பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 805/2016/எச்1) |
| **5.** | இந்நகராட்சி மூலம் தேனி தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் **2018–19**ன் கீழ் கம்பம் நகராட்சியில் பள்ளிவாசலின் சுடுகாடு (அடக்கு ஸ்தலம்) சுற்றுச்சுவர் (Compound Wall) மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதனை ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி தேனி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் வெளியீட்டு ஆணை எண். 29/ஒப்பந்தபுள்ளி/2019, நாள்.01.02.2019 வழியாக மூலம் தமிழக நியூஸ் நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் விளம்பர கட்டணம் ரூ. 29,295/– அய் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..** மன்றம் அனுமதிக்கலாம். |
| **6.** | தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் கீழ் முதல்நிலை சேகரம் செய்ய பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் (BOV) 23 எண்ணம் விநியோகம் செய்யும் பணிக்கும், இரண்டாம் நிலை குப்பை சேகரம் செய்ய இலகுரக வாகனம் (LCV) 3 எண்ணம் விநியோகம் செய்யும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 1191/ப்பி3/2019, நாள். 21.01.2019 உத்திரவின்படி நிர்வாக அனுமதி வழங்கிய மேற்கண்ட பணிகளுக்கு மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை சென்னை, செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் வெளியீட்டு ஆணை எண்.608/ஒப்பந்தபுள்ளி/2019, நாள்.29.01.2019 வழியாக நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகையில் பட்டியல் தொகை ரூ. 26,040/–ஐ (ரூபாய் இருபத்து ஆறாயிரத்து நாற்பது மட்டும ) அக்கார்டு அட்வர்டைசிங் ஏஜென்ஸி, சென்னை நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலக குறிப்பு –** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண். 1260/2018/இ1) |

| | |
|---|---|
| 7. | தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019, விதி 14–இல் திட்ட அனுமதி அல்லது கட்டிட அனுமதி ஐந்து ஆண்டுகள் மற்றும் ஒருமுறை கால நீட்டிப்புக் காலம் மூன்றாண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி கட்டணங்களை 50 சதவீதம் உயர்வு செய்து வசூலிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. முதல் அனுமதி காலமான ஐந்து ஆண்டு கால வரையறைக்குள் கட்டிடப்பணி முடிக்கப்படாமல் ஒருமுறை கால நீட்டிப்பு கோரும் இனங்களுக்கு மூன்றாண்டுகளுக்கான கால நீட்டிப்பும், அதற்கு இணையான கட்டணங்களும் வசூலித்து அனுமதி வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ள சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 31149/2018/டிபி3, நாள். 05.03.2019–இல் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். |
| 8. | <u>2019ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12ன் கீழ் ஏற்படுத்தப்படும் உபவிதிகள்</u><br>தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு 306(28A) ன்படியும் 2019ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12ன் கீழ் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை (use and throwaway Plastic) சேகரித்தல் (Storage) வழங்குதல் ((Supply) கொண்டு செல்லுதல் (Transport) விற்பனை செய்தல் (Sale) மற்றும் பகிர்ந்தளித்தல் (Distribution) ஆகியவற்றை தடை செய்து மேற்கண்ட துணை விதிகளை மீறுகின்ற நபருக்கு கீழ்கண்டவாறு அபராதம் விதிக்கவும் . துணை விதிகள் ஏற்படுத்தலாம். |

| | | | |
|---|---|---|---|
| 1. | (i) | செயலாக்க அதிகாரி | நகராட்சி பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர். |
| | (ii) | ஆய்வு நடத்தும் அதிகாரி | ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சி பகுதிகளில் துப்புரவு பணி மேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையாளரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர் |
| | (iii) | மேல்முறையீட்டு அலுவலர் | இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார் |
| | (iv) | தண்டணைகள் விதிக்கும் முறைகள். | இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல்முறை இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை 2ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே (Spot fine) வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும் நான்காவது முறையாக மீறுபவருக்கு உடனடியாக தொழில் உரிமம் இரத்து செய்யப்படும். |
| 2 | **<u>வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு</u>** | | |
| | (i) | மொத்தமாக (Whole Sale) சேமித்தல்/வழங்குதல்/கொண்டு செல்லுதல்/ விற்பனை செய்தல்/ பகிர்ந்தளித்தல் | |

| | | |
|---|---|---|
| | (ii) | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் பல்பொருள் அங்காடிகள், திரை அரங்குகள், திருமணமண்டபங்கள், மதுபான கூடங்கள், தொழிற்சாலைகள், பள்ளி கல்லூாி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள் |
| | (iii) | மளிகை கடைகள் மருந்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன் கடைகளை முதலானவைகள் |
| | (iv) | சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக்கடைகள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள் |

3 **இந்த துணை விதியை மீறினால் செலுத்தும் அபராதம்**

இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கும் பின்பும் பழக்கப்படும் /எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணைப்படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார். துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசுபடுத்துவர்.

4 அட்டவணை II– ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில்அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனை பூட்டி முத்திரை இடுவதுடன் நகர் காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம 1939–ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

5 **மேல்முறையீட்டுக்கு உரிமை**

கம்பம் நகராட்சியின் துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல்முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள் ஆவர். இந்த துணை விதிகள் கம்பம் நகராட்சி நகர்மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன.

6 **தண்டனைகள் விபரம்**

அட்டவணை – II

பிரிவு 306 (28/A) ன்படி இயற்றப்பட்ட துணை விதிகள் மீறுவதற்கான தண்டங்கள்

| வ. எண் | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் ரூபாய். | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் ரூபாய் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் ரூபாய் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 25,000/– | 50,000/– | 1,00,000/– |
| 2 | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் துர்க்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 10,000/– | 15,000/– | 20,000/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் துர்க்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 1,000/– | 2,000/– | 5,000/– |
| 4 | சிறிய வணிக விற்பனையாளர்களால் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 100/– | 200/– | 500/– |

நாள். 08.03. 2019
இடம். கம்பம்

ஒப்பம்/– திரு ந.சங்கரன்,
ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி,
கம்பம் நகராட்சி.